Deposition of witness.
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, ATHOOR.
C.C.No.31/2021
**Deposition of PW.2**

**பெயர்** : செந்தில்குமார்

த/பெ. : ஜெயராமன்

**கிராமம் :** திண்டுக்கல் நாகல் நகர்

**தாலுகா :**
**தொழில் :** நெசவு வேலை

**மதம் :**
**வயது. :** 48/2022
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 08.12.2022

முதல் விசாரணை

நான் திண்டுக்கல் நகரில் குடியிருந்து கொண்டு நெசவு வேலை செய்து வருகிறேன். கடந்த 19.11.2020 அன்று நாகல் நகர் ஐஸ்வர்யா மெஸ்சில் இருந்து 407 வேனில் தேனியில் நிச்சயதார்த்ததிற்காக சென்றோம். எங்களது 407 வாகனத்தில் பின்னால் 5 சமையல் காரர்களும் முன்னால் டிரைவரும் அவர் அருகில் சங்கர நாராயணனும் நானும் உட்கார்ந்து கொண்டு சென்றோம். திண்டுக்கல்லில் இருந்து மாலை 6.30 மணியளவில் கிளம்பி புதுகோடாங்கிபட்டிக்கு மாலை 7.00 மணியளவில் வந்து கொண்டிருந்தோம் அப்போது பூவாத்தாள் என்ற தனியார் பேருந்து அதிவேகமாக திண்டுக்கல் நோக்கி வந்து கொண்டிருந்தது புது கோடாங்கிபட்டி அருகே எங்களது வேனின் மீது நேருக்கு நேராக டமார் என்று மோதி விபத்து ஏற்படுத்திவிட்டது. அந்த தனியார் பேருந்தின் எண்.1599 ஆகும். நாங்கள் சென்ற 407ன் எண்.2484 ஆகும். விபத்தை ஏற்படுத்திய பேருந்தை ஓட்டி வந்தது யார் என்று சரியாக அப்போது தெரியவில்லை அதன்பின்பு எதிரி வடிவேல் என்பவர் தான் ஓட்டி வந்ததாக தெரிந்து கொண்டேன். தனியார் பேருந்து மோதிய வேகத்தில் எங்களது வண்டியின் பின்னால் இருந்த தேவகி என்பவர் வெளியே போய் கீழே விழுத்நது விட்டார் அப்போது எங்களது வண்டியின் பின்னால் தேவகியை கானோம் என்று சத்தம் போட்டார்கள் நான் இறங்கி சென்று பார்த்போது தேவகி சம்பவ இடத்திலேயே இறந்ததாக சொன்னதாக சொன்னார்கள். அருகில் இருந்தவர்கள் எல்லாம் வந்து எங்களது வண்டிக்குள் அடிபட்டு கிடந்தவர்களை வெளியே தூக்குவதற்கு உதவிசெய்தார்கள். டிரைவர் முருகனுக்கு கால் உடைந்து விட்டது. நெஞ்சில் பலத்த அடிபட்டிருந்தது அவர் அலறி கொண்டிருந்தார் அவரை 108ல் மருத்துவமனைக்கு அழைத்து செல்லும் போது இறந்து விட்டதாக சொன்னார்கள். சங்கர நாராயணன் என்பவருக்கு தலையில் அடிபட்டு ரத்தம் வந்தது. அவரது கை அடிபட்டு தூக்க

முடியாமல் இருந்துது எனக்கு லேசான சிராய்பு மட்டும் இருந்தது. எங்களது வானத்தின் பின்னால் வந்த மற்ற சமையல் காரர்களுக்கும் அடிபட்டு கை கால் தூக்க முடியாமல் இருந்தார்கள். அவர்களை தனியார் மருத்துவமனையில் சிகிச்சையில் சேர்த்து ஒரு மாதம் ஓய்வில் இருந்தார்கள். இந்த விபத்து சம்பந்தமாக போலீசில் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் வைத்து சங்கர நாராயணன் புகார் வாக்குமூலம் கொடுத்தார். அந்த புகார் வாக்குமூலத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

திண்டுக்கல் மாவட்டத்தில் பூவாத்தாள் என்ற பெயரில் எத்தனை பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கிறது என்று எனக்கு தெரியாது. விபத்து ஏற்படுத்திய வாகனம் எங்களது வாகனத்தின் முன்பகுதியில் வந்து மோதியது அப்போது முன்பகுதியில் உட்கார்ந்திருந்த என்க்கு எந்த அடியும் படவில்லை என்றால் சரிதான். விபத்து ஏற்பட்டவுடன் நான் முன்பகுதியில் இருந்ததால் பின்னால் என்ன நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நாங்கள் வந்த 407 வாகனத்தின் பின்னால் சமையல் சாமான்கள் ஏற்றிக்கொண்டு வந்தார்கள் என்றால் சரிதான். நாங்கள் வந்த வாகனம் புதுகோடாங்கிபட்டிக்கு அருகே வந்து கொண்டிருந்தபோது எதிரே வந்த காய்கறி வாகனம் எங்களை கிராஸ் செய்து சென்றதா என்றால் இல்லை. மேற்கண்ட காய்கறி வாகனம் எங்களை கடந்த சென்ற வுடன் அதற்கு பின்னால் வந்த பேருந்தை கவனிக்காமல் நாங்கள் வந்த வாகனத்தின் ஓட்டுநர் கவனக்குறைவாக எதிரே வந்த பேருந்தின் வலது புறத்தில் மோதி விபத்து ஏற்படுத்தினார் என்று சொன்னால் சரியல்ல. மேற்கண்ட காய்கறி வண்டி எங்களை கடந்து சென்றது உண்மை என்றும் இந்த விபத்தில் இறந்து போன மற்றும் காயம் பட்டவர்களுக்காக இழப்பீடு பெற வேண்டி வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தனியார் பேருந்தின் ஓட்டுநரான எதிரி சரியான முறையில் தான் பேருந்தை ஓட்டி வந்தார் என்றும் நாங்கள் சென்ற வேனின் ஓட்டுநர் கவனக்குறைவாக ஒட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்தில் எத்தனை பேருக்கு சிறு காயம் எத்தனை பேருக்கு கொடுங்காயம் ஏற்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியும். நான் ஐஸ்வர்யா மெஸ்சில் சூப்பர்வைசராக பணியாற்றிவதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

P JAISANKAR Digitally signed by P JAISANKAR

District Munsif Cum Judicial Magistrate
Athoor